**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

முன்னிலை: திரு.N.பாரதிராஜன் பி.ஏ., பி.எல்.,

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை

**<u>அ.வ.எண்.162/2020</u>**

பொள்ளாச்சி டவுன், வெங்கடேசாகாலனி, ஐயப்பன் கோவில் பின்புறம் சொர்ணபுஷ்பம் காலனியில் கதவு எண்.13/1ல் வசிக்கும் சுமார் 60 வயதுள்ள லேட். P.வெங்கடாசலகவுண்டர் மகன் P. V. சுப்ரமணியம்

... வாதி

/ எதிர் /

பொள்ளாச்சி வட்டம், P.பென்னாபுரம் தோட்டத்து சாளையில் வசிக்கும் சுமார் 67 வயதுள்ள லேட்.P.வெங்கடாசலகவுண்டர் மகன் P.V தம்பிதுரைகவுண்டர் ... பிரதிவாதி

தாவா சொத்துக்கள் பிரதிவாதியோ, அவரை சார்ந்தவர்களோ, அவரது ஆட்களோ முகவர்களோ அத்துமீறி சட்டவிரோதமாக ஆட்களுடன் நுழைந்து எவ்விதத்திலும், எக்காலத்திலும் கட்டிடம் கட்டுவதற்கு எந்தவிதமான முயற்சிகளும் செய்யாமல் தடுக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும் தாவா செலவுத்தொகையும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 06.06.2020

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 15.03.1958, 08.04.2016, 15.02.2020, 21.05.2020, 22.05.2020, 27.05.2020 மற்றும் 02.06.2020 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி டவுனில் ஆரம்பம்

தாவா மதிப்பு ரூ.1,000– மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.30.00/– தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 27(சி) ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

**தாவா மதிப்பு விவரம்**

தாவா ' அ' பரிகாரம் மதிப்பு 1,000.00

இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம்

சட்டம் பிரிவு 27(சி))ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.30.00

இந்த வழக்கானது என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கணேஷ்ராம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.அருள்பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், வாதி அழைத்தும் ஆஜரின்மையினாலும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் தீர்ப்பாணை :–

1. வாதியின் வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

**சொத்து விபரம்**

கோயம்புத்தூர் ரிடிடு பொள்ளாச்சி சப்டி பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன் சர்வே வார்டு 5, T.S.No.4 நெ. காலை பு.ஏ.5.40 க்கு தீர்வை ரூ.6.1.0 இந்த பூமியில் வடபுறம் தென்வடல் கோயம்புத்தூர் ரோட்டுக்கும் மேற்கு, P.K.சேதுராமசாமிகவுண்டர் பூமிக்கும் தெற்கு, T.S.No.4 நெ.காலையில் P.வெங்கடாசலகவுண்டர் பாக பூமிக்கும் வடக்கும், கிழக்கும் இதன் மத்தியிலுள்ள பு.ஏ.0.10 செண்ட்டுக்கு தீர்வை 0.2.0 உள்ள பூமியும் இதில் உள்ள சமாதியும் கந்தாயம் 0.2.0 முன் பத்திர ஷரத்துக்கள்படி மாமூலமாய் இருந்து வரும் சகலவதமான பாத்தியங்கள் தடபாத்தியங்கள் சகிதம்.

2023 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 12 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒப்பம்) N.பாரதிராஜன்
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

---

**DECREE**

O.S.No.162/2020

Additional District Munsif Court

Pollachi

Date : 12.07.2023

---